**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**நெய்வேலி.**

**STC.No. 287 / 2023**

**PW-1**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 -ம் நாள் வெள்ளிக் கிழமை புகார்தாரர் தரப்பு 1- வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3 ன் படி 17.10.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் R.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஆரோக்கியம் | **தொழில்** | கூலி வேலை |
| **தந்தை பெயர்** | செல்வராஜ் | **வசிப்பிடம்** | வெளிக்கூனங்குறிச்சி |
| **வயது** | 45 | **வட்டம்** | விருத்தாச்சலம் |

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் ஏற்கனவே எனது முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன். என் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய தற்போது சாட்சியம் அளிக்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| **பு.சா.ஆ.2** | 08.03.2023 - அன்று புகார்தாரர் கணக்கு வைத்துள்ள கனரா வங்கி, சுரங்கம் - II கிளை பு.சா.ஆ.1 காசோலை சம்மந்தமாக வழங்கியிருந்த திருப்புதல் நமுனா. |
| **பு.சா.ஆ.3** | 24.03.2023 - தேதியிட்டு புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பியிருந்த அறிவிப்பின் அலுவலக **நகல் (அசல் அஞ்சல் ரசீதுடன்)** |
| **பு.சா.ஆ.4** | பு.சா.ஆ.3 அறிவிப்பை எதிரி 25.03.2023 அன்று பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |

| | |
|---|---|
| **பு.சா.ஆ.5** | 21.04.2023 - அன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய ரீஜாய்ன்ட்டர் அறிவிப்பின் அலுவலக நகல் (**அசல் அஞ்சல் ரசீதுடன்**) |
| **பு.சா.ஆ.6** | 24.04.2023 - அன்று பு.சா.ஆ.5 அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |

**புகாரின்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்**

(எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது).